**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அலுவலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அலுவலகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அலுவலகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அலுவலகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அலுவலகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக அலுவலகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அலுவலகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க அலுவலகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 மார்ச் மாதத்தின் போது நீதி அமைச்சிலிருந்து | 2022 ஆம் ஆண்டின் போது உரித்து கையேற்கப்பட்ட வாகனத்தின் பெறுமதி | சொத்துக்களை கணக்கீடு செய்து நிதிக்கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | கையளிக்கப்பட்ட கிரயம் ரூபா 2,600,000 ஆன மோட்டார் வாகனம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்யப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் போது அலுவலகத்தை பகுதிளாக பிரிக்கும் செலவினமான ரூபா 798,639 கட்டிடமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2022 செப்தெம்பர் மாதத்தின் போது கட்டிடத்திலிருந்து விலகிச் செல்ல வேண்டி ஏற்பட்டமையால் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட 05 சதவீத பேரியளவாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் கணக்குகளில் பொருத்தமான பிரகாரம் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | சொத்துக்களின் பெறுமானத்தேய்வு செலவினம் பயன்பாடுள்ள ஆயுட்காலத்தில் இனங்காணப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 பெப்ரவரி 28 ஆந் திகதிய 04/2017 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் பயிலுனர்களுக்கு நாளாந்தம் ரூபா 500 படியொன்று செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக நாளாந்தம் ரூபா 1,000 வீதம் 18 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்காக ரூபா 283,418 படியாக செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை சேர்ப்பதற்கான சம்பளத்திற்காக கிடைக்க வேண்டிய நிதியேற்பாடு கிடைக்காமையால் மாற்றுவழியாக கடமை செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பயிலுனர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய | அலுவலகத்தில் பணிப்பாளர் சபையால் | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் | சுற்றறிக்கையின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பந்தி | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் வரிசை அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கண்காணித்துக் கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,466,061 பற்றாக்குறையாக இருந்துததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,052,909 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,518,970 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிற்கு மீண்டெழும் பெறுவனவுகளில் ரூபா 4,495,444 குறைவடைந்தமை மற்றும் சேவைச் செலவினம் ரூபா 5,160,711 அதிகரித்தமை என்பன பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் காணாமல் போனவர்களுக்குரிய 39,473 முறைப்பாடுகள் கிடைத்திருந்த போதிலும் இதுவரை விநியோகிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையின் எண்ணிக்கை 67 மாத்திரமாக இருந்தது. மேலும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்குரிய 21,171 கோவைகள் திறக்கப்பட்டிருந்ததுடன் விசாரணைகளுக்காக கோரப்பட்ட | முறைப்பாடுகளுக்காக நடாத்தப்படுகின்ற விசாரணைகளின் அளவை அதிகரிக்கும் நோக்கில் 2022 சனவரி மாதம் முதல் வட மாகாணத்தில் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | காணாமல் போனவர்களுக்குரிய முறைப்பாடுகள் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அழைக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 702 ஆனமையால் செயல்முன்னேற்ற சதவீதம் 3.32 ஆன மிகவும் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | | |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 33 ஊழியர்களையுடைய பதவியணியினருடன் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 67,196,544 கிரயம் செலவிடப்பட்டிருந்த போதிலும் சட்டத்தில் காணப்படுகின்ற பணிகள் மற்றும் ஏனைய பணிகளை நிறைவேற்றுவதற்காக திட்டமிடங்கள் தயாரித்து அமுல்படுத்தாமையின் காரணமாக 2016 இன் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை ஸ்தாபிக்கும் சட்டத்தின் 11 ஆம் பகுதியின் 10(ஆ) பிரிவின் பிரகாரம் காணாமல் போனவர்கள் பற்றி இடம்பெற்றவைகள் தொடர்பாக சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக உரிய அதிகாரத்தரப்பினருக்கு பரிந்துரைகளை வழங்கல், 10(இ) பிரிவின் பிரகாரம் சட்டத்தின் ஏற்பாடுகளில் வழங்கப்பட்டுள்ள பிரகாரம் காணாமல் போனவர்கள் மற்றும் அவர்களின் உரிமைகள் மற்றும் கடமைகளை பாதுகாத்தல் சட்டத்தின் II ஆம் பகுதியின் 10(1) இல் காண்பிக்கப்படுகின்ற பணிப்பொறுப்புக்களை | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காரணமாக பிரதேச அலுவலகங்களிலிருந்து எதிர்பார்த்த பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.<br>2022 ஆம் ஆண்டு முதல் பிரதேச அலுவலகங்களுக்கு அதிக பொறுப்புக்கள் கையளித்து எதிர்பார்க்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நிறைவேற்றுவதற்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்காக பொருத்தமான பொறிமுறைமை யொன்றை ஸ்தாபிப்பதற்கும், பணிகளை நிறைவேற்றுவதற்கும் முடியாதிருந்தது.

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக 04 மாகாண அலுவலகங்கள் நடாத்திச் செல்லப்படுவதுடன் அவற்றில் 04 மாகாண இணைப்பாளர்களை உள்ளடக்கிய 13 உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்றனர். அவர்களுக்காக மீளாய்வாண்டின் போது சம்பளமாக ரூபா 7,442,045 தொகையும், கட்டிட வாடகை, மின்சாரம், நீர்ப்பட்டியல்கள், பாதுகாப்பு சேவை மற்றும் சுத்திகரித்தல் கட்டணமாக ரூபா 8,528,764 தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அவர்களுக்கு பணிகளை கையளித்து அந்தப் பணிகள் அவர்களால் மேற்கொள்ளப்படுகின்றதா என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமையினால் எதிர்பார்க்கப்பட் பிரகாரம் பிரதேச அலுவலகங்களில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு வசதியீனமாக இருந்தது. எனினும், எதிர்காலத்தில் பிரதேச இணைப்பாளர்களுக்கு குறித்துரைத்த கடமைகளை கையளித்து மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உத்தியோகத்தர் களுக்கு பணிப் பொறுப்புக்களை கையளித்து அந்த பணிகள் நிறைவேற்றப் படுகின்றதா என மதிப்பீடு செய்தல் வேண்டும். |